முதன்மை சார்பு நீதிமன்றம், மயிலாடுதுறை

முன்னிலை திரு. பா. கௌதமன், பி.ஏ.,பி.எல்.,

முதன்மை சார்பு நீதிபதி

ம.சா. 2 நாள் 18.03.2022

| | | | |
|---|---|---|---|
| எம்.சி.ஓ.பி.எண். | 301/2019 | | |
| பெயர் | கருணாநிதி | த/பெ. | |
| வயது | | தொழில் | |
| ஜாதி | | மதம் | |
| கிராமம் | | தாலுக்கா | |

சாட்சி அழைக்கப்பட்டு உறுதிமொழி செய்யப்பட்டு முதல் விசாரணை

நான் மனுதாரர் தரப்பு சாட்சி ஆவேன். எனது முதல் விசாரணையை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதிலுள்ள விபரங்கள் எனக்கு தெரியும். வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான்.

1ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை

விபத்து சமயத்தில் சுந்தரம் டீ கடையில் டீ குடித்து கொண்டிருந்தேன். சுந்தரம் டீ கடை குத்தாலம் பேருந்து நிலையம் அருகில் உள்ள அண்ணா சிலை அருகே உள்ளது. அண்ணா சிலைக்கும் பெரியார் சிலைக்கும் 100 மீட்டர் தூரம் இருக்கும் என்றால் சரிதான். 100 மீட்டர் தொலைவில் நின்று கொண்டிருந்த நான் விபத்தை பார்த்திருக்க வாய்ப்பில்லை என்றால் சரியல்ல. இறந்து போன கண்ணனும் நானும் மேல சாலையில் ஒரே தெருவில் வசிக்கிறோம். குற்ற வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்து வாக்குமூலம் பெற்றார்கள். போலீசார் விசாரணையில் சிவப்பு நிற சைலோ வாகனம் மோதியதாக சொன்னேன். போலீசார் விசாரணையில் விபத்து சம்பந்தமாக நான் கேள்விபட்டதாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. வாகனம் மோதிய பிறகு நிற்க்காமல் வேகமாக சென்றுவிட்டது. அதனால் நான் வாகனத்தின் பதிவு எண்ணையும் அதன் ரகத்தையும் பார்த்திருக்க வாய்பில்லை என்றால் சரியல்ல. என்னை கடந்து 100 மி சென்ற பிறகு தான் வாகனம் விபத்தை ஏற்படுத்தி சென்றது. அதனால் வாகனத்தின் முன்பகுதியில் என்ன நடந்தது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். அதனால் நான் விபத்தை நேரடியாக பார்த்திருக்க வாய்பில்லை என்றால் சரியல்ல. இறந்து போன கண்ணன் மற்றும் மனுதாரர்கள் எனது தெருவை சேர்ந்தவர்கள் என்பதால் அவர்களுக்காக பொய் சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

3ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை

நான் குத்தாலம் பேருராட்சியில் மதிமுக கட்சியின் நகர செயலாளர். குத்தாலத்தில் நான் ஹோட்டல் வைத்துள்ளேன். எனது கடை விபத்து நடந்த இடத்தில் இருந்து 200 மி துாரத்தில் உள்ளது. கடையின் பெயர் தங்கப்பன் டிபன் சென்டர். நான் வாகனத்தின் பதிவு எண்னை பார்திருந்தால் ம சா 1 கொடுத்த புகாரிலும் முதல் தகவல் அறிக்கையிலும் வாகனத்தின் பதிவு எண் சொல்லபட்டிருக்கும் என்றால் சரியல்ல. மனுதாரர்களுக்கு நஷ்டஈடு கிடைக்க வேண்டும் என்பதற்காக மூன்று ஆண்டுகள் கழித்து விபத்தை பார்த்தாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. விபத்து சம்பந்தமாக குற்ற வழக்கில் நான் இதுவரை சாட்சி சொல்லவில்லை. 108 ஆம்புலன்சை நான் தான் அழைத்ததாக காவல்துறை விசாரணையில் சொன்னேன் என்றால் சரிதான். போலீசார் விசாரணையில் நான் சொன்ன விபரங்கள் உண்மையானது தான். போலீசார் என்னை பார்வை மகஜா் சாட்சியாக மட்டும் விசாரித்துள்ளாா் என்றால் சரியல்ல. விபத்தையும் 1ம் எதிா்மனுதாரா் வாகனத்தையும் நான் நேரடியாக பாா்க்கவில்லை என்றால் சரியல்ல. ஹோட்டல் நடத்திவரும் நான் டீ குடிப்பதற்காக கடையை விட்டு வந்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.